Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**Name of the Resource person: Dr. N. Vivekraj** **Podcast Title: Pharmacovigilance awareness**

**Department: Pharmacology** **Category: (Select relevant category) Public awareness / Day celebration**

**TRANSCRIPT**

வணக்கம் நான் டாக்டர் விவேக்ராஜ் மருந்தியல்துறை ஸ்ரீ மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி. இந்த ஒலிப்பதிவில் மருந்தககண்காணிப்பு அதாவது pharmacovigilance பற்றிய ஒரு சிறு தொகுப்பை கேட்க உள்ளோம். மருந்துகளின் எதிர்மறையான விளைவுகளை குறிப்பாக அவற்றின் நீண்டகால மற்றும் குறுகியகால பக்கவிளைவுகளை கண்டுபிடித்தல் புரிந்துகொள்ளுதல் மற்றும்தடுத்தல் ஆகியவற்றோடு தொடர்புடைய அறிவியல் மருந்தககண்காணிப்பு அதாவது Pharmacovigilance எனப்படும்

நாடுமுழுவதும் pharmacovigilance வாரமாக September 17-23 கொண்டாடபடுகிறது. நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துமாத்திரைகள் அதாவது ஆங்கிலமருந்துகள் உயிரியல் தயாரிப்புகள் ஆயுர்வேதியியல் மற்றும் பாரம்பரிய தயாரிப்புகள் இவற்றுள் எந்த மருந்துகளாலும் பக்கவிளைவுகள் ஏற்படலாம். இந்த பக்கவிளைவுகள் ஏற்படும்போது பயப்படவோ பதற்றப்படவோ கூடாது. அருகில் உள்ள மருத்துவரை விரைந்து அணுகவும். மேலும் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் எந்த ஒரு மருந்துகளையும் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் பக்கவிளைவு ஏற்படின் அது எந்த மருந்தினால் ஏற்பட்டது என்பதை கண்டறிய இயலாது. ஆகவே நீங்கள் மருத்துவரிடம் செல்லும்போது பக்கவிளைவு ஏற்பட காரணமாக இருந்த மருந்து சீட்டுகளையும் பரிசோதனை சீட்டுகளையும் தவறாமல் எடுத்துவரவும்.

நமது மணக்குள விநாயகர் மருந்தியல்துறை அங்கீகரிக்கப்பட்ட பக்கவிளைவு கண்காணிப்பு மையமாகும். பக்கவிளைவு தொடர்பான விவரங்களை தெரியப்படுத்த மருந்தியல்துறையின் extension எண் 2081 அழைக்கவும். பக்கவிளைவு தொடர்பான விவரங்களை மருத்துவர்கள் செவிலியர்கள் மருந்தாளுணர்கள் நோயாளிகள் மற்றும் நோயாளிகளின் உறவினர்கள் தெரியப்படுத்தலாம். இவ்வாறு அறிகுறிகளை தெரியபடுதுவதின் மூலம் தீவிர பக்கவிளைவு ஏற்படுத்தும் மருந்தினை கண்டறிந்து அவற்றின் உபயோகத்தை தடுக்கலாம். மேலும் புதிய மற்றும் தீவிர பக்கவிளைவு ஏற்படுத்தும் மருந்தினை விரைந்து கண்டறியலாம். நீங்கள் செய்யும் இந்த சிறிய உதவி மருத்துவதுறையின் மேம்பாட்டிற்கு பெரிதும் உதவும். பக்கவிளைவுகளை தடுப்போம் மனித உயிர்களை காப்போம்

Signature of the Resource Person

13.09.22

Signature of the HOD